03.06.2024

<u>கூடுதல் அமர்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.</u>

<u>அமர்வு வழக்கு எண். 205/2018</u>

அ.சா.16

| | | | |
|---|---|---|---|
| பெயர் | அமலநாதன் | | |
| த/பெ | செல்வராஜ் | | |
| கிராமம் | சண்முகபுரம் காலனி | தொழில் | |
| தாலுக்கா | விழுப்புரம் | வயது | 39/2024 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | |

**இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.**

**<u>முதல் விசாரணை</u>**

**நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது** தலைமை காவலராக விழுப்புரம் நகர காவல் நிலையத்தில் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2014ம் வருடம் விழுப்புரம் இருப்பு பாதை காவல்நிலையத்தில் காவலர் எண் 1686 ஆக அயல் பணியில் பணிபுரிந்து வந்தேன். கடந்த 06.05.2014 அன்று இரவு நடைபாதை பாதுகாப்பு அலுவலராக இரவு 21 மணிக்கு பணிக்கு வந்தேன். வந்தபிறகு நான் பீட்புக் மற்றும் பிளார்பாம் புக் எடுத்து கொண்டு பணிக்கு சென்றுவிட்டேன். நான் அன்று பணிக்கு செல்வதற்காக காவல் நிலையத்திற்கு வந்தபோது 2 பேர் காவல் நிலையத்தில் இருந்தார்கள். நான் அவர்கள் யார் என்ன என்று விசாரிக்கவில்லை. நான் அன்று நடைபாதை எண் 1,2,3 ஆகியவற்றின் தெற்கு பகுதி பாதுகாப்பிற்கு சென்று விட்டேன். அப்போது ரைடு வந்த மேல் அதிகாரிகள் நான் பணியில் இருக்கிறேனா, இல்லையா என்று சோதனை செய்தார்கள். நான் இரவு முழுவதும் பணியில் இருந்தேன். அதிகாலை 4.30 மணியளவில் அன்று கிரைம் பணி பார்த்த லோகேஷ்குமார் என்பவர் எனக்கு போன் மூலமாக தன் குழந்தைக்கு உடல்நிலை சரியில்லாததால் நான் வீட்டிற்கு செல்வதாக சொல்லிவிட்டு சென்றுவிட்டார். பிறகு 07.05.2014 அன்று காலை 7.45 மணிக்கு பணி முடித்து பீட்புக் மற்றும் பிளாட்பார்ம் புக் ஆகியவற்றை காவல்

நிலையத்தில் வைத்து விட்டு நான் வீட்டிற்கு சென்றுவிட்டேன். அப்போது நான் காவல் நிலையம் உள்ளே செல்லவில்லை. பிறகு 07.05.2014 அன்றே 14 மணிக்கு மதிய ரோந்து அலுவலாக காவல் நிலையத்திற்கு வந்தபோது காவல் நிலையம் ஒரே பரபரப்பாக இருந்தது. அப்போது அங்கு உயர் அதிகாரிகள் இருந்தனர். அவர்கள் ஏதோ குறித்து விசாரணை செய்து கொண்டிருந்தார்கள். அப்போது என்னுடன் பணியில் இருந்த சில காவலர்கள் காவல் நிலையத்தில் இருந்த விசாரணை கைதி இறந்து விட்டார் என கூறினார்கள். நான் அதுகுறித்து ஏதும் விசாரிக்கவில்லை. அதன் பிறகு மதியம் வழக்கம் போல நான் நடைபாதை பணிக்கு சென்று விட்டேன். நான் அன்று காவல் நிலையம் சென்றபோது காவல்நிலையத்தை கழுவி சுத்தம் செய்திருந்தார்கள். இதுசம்மந்தமாக நீதித்துறை நடுவர் விசாரணை செய்தார்கள். ஆனால் என்னை விசாரிக்கவில்லை. இதுகுறித்து விழுப்புரம் மற்றும் வேலூர் சிபிசிஐடி ஆய்வாளர்கள் விசாரணை செய்தார்கள்.

1,2,4,5 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை

3ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

07.05.2014 மதியம் 2 மணிக்கு காவல் நிலையம் சென்றேனா என்றால் ஆமாம். அப்போதுதான் உயர்அதிகாரிகள் காவல் நிலையத்திற்கு வந்தார்கள். அவர்கள் அப்போதுதான் வந்தார்களா என்று எனக்கு தெரியாது. நான் போகும்போது அவர்கள் அங்கு இருந்தார்கள். நான் 2 மணிக்குதான் காவல்நிலையம் கழுவி இருப்பதை முதலில் பார்த்தேன்.

**மறுவிசாரணை இல்லை.,**